நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்கள் இந்த செஷன் முழுவதும் நீக்கப்படவேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் சில பத்திரிகைகளில், நாங்கள் இந்தப் பிரச்சினைகளில் கலந்து கொண்ட நோக்கத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். அதாவது, ஒரு கட்சி எங்களைத் தூண்டிவிடுவதாக அதிலே எழுதி இருக்கிறார்கள். நாங்கள் கேட்கவேண்டியதெல்லாம், எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்லாமல் அந்த எதிர்க்கட்சியில் இருக்கிற சில உறுப்பினர்கள் தேசப்பிதாவைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றி சிங்காரம் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இப்போது நீங்கள் சொன்னதற்கு நான் சொல்லிவிடுகிறேன். திரு. சின்னப்பனைத் தாக்கியதற்கு உடனடியாக எனக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி நேற்றே அவரை வெளியேற்றிவிட்டேன். இந்த செஷன் முழுவதும் வெளியேற்றப்பட வேண்டுமானால் ஏற்கெனவே இன்னொரு பிரச்சினையில், நான் தெரிவித்ததைப் போல அதற்குப் பேரவைதான் ஒரு முடிவு எடுக்கவேண்டி வரும். அவரே இரண்டாவது முறையும் இந்த மாதிரி நடந்து கொள்வாரானால், எனக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த செஷன் முழுவதும் வராமல் தடுக்க முடியும். எனவே, போதும் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சிங்காரம் அவர்கள் சொல்லிவிட்டார்கள்; உட்காருங்கள்.

6. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் விடுதியில் உள்ள அறைகளில் தங்கியுள்ளவர்கள் குறித்து உறுப்பினர்கள் அனுமதியின்றி ஊழியர்கள் விசாரித்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் காவலர்களை செக்யூரிட்டி பாதுகாப்பிற்காக எப்போதும் போடுவது என்பது வழக்கம். காரணம் என்னவென்றால், சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிற நேரத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுடைய உறவினர்கள், மற்றவர்கள், பொதுமக்கள் எல்லோரும் வந்து அவர்களைச் சந்திக்கிற காரணத்தால், ஏதாவது பதட்டம் ஏற்படக்கூடாது என்பதற்காக அத்தகைய

பாதுகாப்பைத் தாங்கள் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். அது வரவேற்கவேண்டிய ஒன்று. ஆனால், நேற்றையதினம், சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதிக்குச் சென்று, சி.ஐ.டி. போலீஸ் என்ற பெயரால், ஒவ்வொரு அறைக்கும் சென்று, அங்கே யார் யார் தங்கியிருக்கிறார்கள், நீங்கள் எந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், எந்தெந்த ஊரிலேயிருந்து வந்திருக்கிறீர்கள் என்று ஒவ்வொரு அறையிலும் சென்று அவர்களை விசாரிக்கக்கூடிய (குறுக்கீடு)

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சி.ஐ.டி. போலீசார் விசாரிக்கவில்லை. என்னுடைய அனுமதியின் பேரில் நம்முடைய பேரவைச் செயலக ஊழியர்கள்தான்- சில அறைகளில் யார், எவர் என்று தெரியாமலேயே பல இடங்களிலே விடுதியில் தங்கிக் கொண்டிருக்கிறார்கள் -விசாரித்திருப்பார்கள். ஆகவே, நான்தான் அலுவலக ஊழியர்களை-சி.ஐ.டி. போலீஸ் அல்ல -ஒவ்வொரு அறையிலேயும் தங்கியிருக்கிறவர்கள், உறுப்பினருடைய அனுமதியைப் பெற்றுத்தான் தங்கியிருக்கிறார்களா என்று விசாரிக்கச் சொன்னேன். உங்கள் அறையில் 10 பேர் படுத்திருக்கிறார்கள். உங்களுடைய அனுமதியின்பேரில் படுத்திருக்கிறார்களா என்று பார்க்க வேண்டாமா?(குறுக்கீடு) 'உங்கள்' என்று சொன்னால் எல்லா உறுப்பினர்களையும்தான் குறிக்கும். இப்போது விடுதிக்குத் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். நமக்கு இருப்பது புதிய விடுதியில் 192 அறைகள். 192 அறைகளுக்கும் நாங்கள் கொடுக்கின்ற தண்ணீரின் அளவு 35 லாரிகள். ஏறத்தாழ 3000 பேருக்குக் கொடுக்க வேண்டிய தண்ணீரை நம்முடைய விடுதியில் 192 பேர்களுக்குத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படியானால் எத்தனைப் பேர் தங்கியிருக்கிறார்களோ அவர்களெல்லாம் அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினருடைய அனுமதி பெற்றுத்தான் தங்குகிறார்களா என்றாவது விசாரிக்கவேண்டும். அப்படி அனுமதி இல்லாமல் சிலர் தங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்களை வெளியேற்றவேண்டும் என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நீங்கள், காவலர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னீர்கள். 2 நாட்களுக்கு முன்னர் வேறு ஏதோ விவகாரத்திலே ஈடுபட்டவர்கள் ஓடிவந்து சட்டமன்ற விடுதி வளாகத்திலே உள்ள டோபிகானா பகுதியில் ஒளிந்து கொண்டிருந்திருக்கிறார்கள். அவர்கள் ஒளிந்திருக்கிற தன்மையைப் பார்த்து உடனடியாக அவர்கள் ஐயுற்று, அவர்களைப்

பிடித்துக் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று விசாரித்து, அதன் பின்னர் இன்றைக்குக் காங்கிரஸ் உறுப்பினர்--அரசைப் பற்றியும், என்னைப் பற்றியும் ஏதேதோ சொல்லிக்கொண்டிருக்கிற நிலையில் ஒரு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்--எனக்கு ஆபத்து இருக்கிறது என்று சொன்ன காரணத்தால் அவருக்கு ஒரு தனியான பாதுகாப்புப் போடப்பட்டிருக்கிறது. அப்படிப் போடப்பட்டவர், என்னைத் தாக்க வந்தவர்கள்தானா என்பதை விசாரித்துச் சொல்லுங்கள் என்று அவர் உடனே கேட்டார். அந்த அளவிற்கு காவலர்கள் அங்கே இருக்கின்ற காரணத்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே அவர்கள் இருப்பதே தவறு என்று சொல்லவேண்டாம். இதை சி.ஐ.டி. போலீஸ் யாரும் விசாரிக்கவில்லை.

திரு. ஜி. பழனிசாமி: காவலர்கள் அங்கே பாதுகாப்பிற்காக இருப்பதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். நான் இந்தச் சம்பவத்தை இன்றையதினம் உங்களிடத்திலே குறிப்பிடவில்லை. சட்டமன்ற உறுப்பினர் வளாகங்களில், சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே எவ்வளவு கட்டுப்பாடற்ற நிலைமைகள் இருக்கின்றன என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவையினுடைய செயலாளர் அவர்களிடத்திலும் நேரடியாகப் பல தடவை சொல்லியிருக்கிறேன். கட்டுப்படுத்த முடியவில்லை என்று தெரிகிறது. ஆனால், நேரடியாக தங்கி இருக்கக்கூடிய ரூமிற்கு யாரும் வந்ததே கிடையாது. அந்த ரூமில் இருக்கக் கூடியவர்கள் எல்லாம் எந்த ஊர், என்ன பெயர், நீங்கள் எங்கே வந்தீர்கள், எப்போது வந்தீர்கள் என்றெல்லாம் சொல்லி, இப்படி விசாரிக்கிற முறை என்பது புதிதாக இருக்கிறதே, அது என்னவென்று தெரியவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே சொல்கிறீர்கள் கட்டுப்பாடற்ற நிலைமை இருக்கிறதென்று. கட்டுப்படுத்த முற்பட்டால் எப்படி விசாரிக்கலாம் என்கிறீர்கள். நான் என்ன செய்வது? சட்டமன்ற விடுதியில் கட்டுப்பாடற்ற நிலைமை இருக்கிறதென்று நீங்கள்தான் தெரிவித்தீர்கள். அதனால், நான் செயலாளருக்கு உத்தரவிட்டேன். யார் தங்குகிறார்கள், எத்தனைப் பேர் தங்குகிறார்கள் என்றாவது நமக்கு ஒரு விவரம் தெரிய வேண்டும். எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைத்தால் மற்றவர்கள் தங்க அனுமதிக்காமல் விட்டு விடுகிறோம். பார்த்துக் கொள்கிறோம் என்று சொன்னால் நானேகூட பெரிதும் பாராட்டுவேன்.

1995 மார்ச் 31]

திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது பத்திரிகைகளில் போட்டிருக்கிறார்கள், we were instigated by the ruling party என்று. ஆனால் அது உண்மைக்கு அப்பாற்பட்டது. அதாவது தேசப் பிதாவைப் பற்றிப் பேசுவதற்கு ஏதாவது தூண்டுதல் தேவையா? அதாவது, காங்கிரஸ் கட்சியிலே இருந்து கொண்டு....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இதை அப்போதே வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) இப்போது நீங்களே கேட்டீர்கள். அவர் சொல்ல வேண்டும் இல்லையா? அதே மாதிரி அவர் வேறு ஏதோ புதியதாகக் கேட்கிறார்.

திரு. ஜி. பழனிசாமி: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவையின் நேரத்தை வீணாக்குகிறாரே!

திரு. சஞ்சய் ராமசாமி: உண்மையிலேயே மாண்புமிகு உறுப்பினரைப் பாராட்ட வேண்டும். இன்றைக்குத்தான் அவருக்கு சட்டமன்றப் பேரவையின் நேரத்தைப் பற்றி உண்மையிலேயே அக்கறை இருக்கிறது. இத்தனை நாட்களாக இருந்தும், அவருக்கு இங்கே வெளிநடப்புச் செய்யும்போது அக்கறை இல்லை. ஆனால் இன்றைக்கு மட்டும் இந்த அவையின் நேரத்தை நான் வீணாக்குகிறேன் என்று என்னைப் பார்த்துக் கூறுகிறார்கள். திடீரென்று இவருக்கு எப்படி அக்கறை வந்தது என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் அதை விளக்குவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஆண்கள் மட்டும் தங்கவில்லை. பெண்களும் தங்கியிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினருடைய பெயரைச் சொல்லிவிட்டு யார் யாரோ வருகிறார்கள். சில சமயங்களில் சின்னச் சின்ன பொருள்கூட திருடு போய்விடுகிறது. இந்த மாதிரி சூழ்நிலையில் ஒவ்வொரு ரூமிலும் யார் தங்கியிருக்கிறார்கள் என்று கேட்பதிலே தப்பே கிடையாது. ஏனென்றால் ஒவ்வொரு ரூமிலும் 10 பேர் தங்கியிருப்பார்கள். அதை நானே பார்த்து இருக்கிறேன். என்னுடைய பக்கத்து ரூமில் 10 பேர் 'ஓ' வென்று கத்திக் கொண்டிருப்பார்கள். அப்பொழுது நாம் போய் அவர்களை ஒன்றும் சொல்ல முடியாது. அதனால், நமக்கெல்லாம் தலைவராக இருக்கிற தலைவர்தான் அவர்களைக் கேட்க முடியும். மாண்புமிகு உறுப்பினர்

சஞ்சய் ராமசாமி அவர்கள் சொல்ல வந்தது என்னவென்றால், ஏ.டி.எம்.கே. பார்ட்டி இன்ஸ்டிகேட் பண்ணிதான் நாங்கள் எல்லாம் இப்படிச் செய்கிறோம் என்பது முற்றிலும் தவறானது. மகாத்மா காந்தி பிரச்சினை வரப் போகிறது என்று அவர்கள் என்ன சொப்பனம் கண்டார்களா? அல்லது மாயா ஜாலக் கண்ணாடி வைத்துக் கொண்டிருக்கிறார்களா? அது முற்றிலும் தவறு என்று குறிப்பிட்டு விட்டு அமர்கிறேன். வணக்கம்.

முற்பகல் *10-45*

(ஆ) 29.3.95 ஆம் நாளன்று அவையில் உறுப்பினர் திரு. ச. அழகிரி பேசியதைத் திரித்துப் பத்திரிகைகளில் வந்துள்ள செய்தி குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சில பத்திரிகைகளில் மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் பேசியதைத் திரித்து தவறாக வெளியிட்டிருக்கிறார்கள். அவர் அவையில் என்ன பேசினார் என்பதை நீங்களும் பத்திரிகையில் வெளியிட்டால் அது மக்கள் மத்தியில் உண்மை என்ன என்பதைத் தெளிவாக்கும். அதனால் அதை நீங்கள் வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நேற்றே இங்கே வாசித்துக் காண்பித்திருக்கிறேன். அவர் பேசிய பேச்சை அப்படியே சுருக்கெழுத்தாளர்கள் எடுத்துக் கொடுத்து (குறுக்கீடு) இல்லை, அது பத்திரிகையாளர்கள் தர்மம். பல பத்திரிகையாளர்கள் பெரும் தர்மங்களையெல்லாம் கடைப்பிடிக்கிறார்கள்.

7. கவன ஈர்ப்பு

(அ) சேலம் செவ்வாய்ப்பேட்டை 'லீ' பஜாரில் தீ விபத்தினால் ஏற்பட்ட சேதம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. திருவாளர்கள் மு. நடேசன், இரா. தாமரைக்கனி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம்